# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை
***********************

**இருதரப்பு உறவுகள் குறித்து இந்திய – இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்க உறுப்பினர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்**

இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே மற்றும் இந்திய இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இடையிலான சந்திப்பொன்று 2023 ஆகஸ்ட் 23ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் நடைபெற்றிருந்தது. பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 50க்கும் அதிகமான எம்பிக்கள் கலந்துகொண்ட இந்த கலந்துரையாடல், கௌரவ சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அவர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன் இதில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் அவர்கள் காணொளி மூலமாக உரை நிகழ்த்தியிருந்தார்.

2. இரு நாடுகளினதும் சட்டமன்றங்கள் இடையிலான தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான ஒரு முக்கிய தளமாக இந்திய-இலங்கை பாராளுமன்ற நட்புறவு சங்கம் ஆற்றிவரும் பங்கை தனது உரையில் வலியுறுத்திய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளையும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இங்கு உரையாற்றிய இந்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்தமையை ஞாபகமூட்டியதுடன், இரு நாடுகளிலும் பொருளாதார செழுமையினை உருவாக்குவதில், தொடர்புகளின் முக்கிய வகிபாகத்தையும் வலியுறுத்தியிருந்தார். இதேவேளை, இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காக இந்தியாவை பாராட்டிய இந்திய இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள், இரு நாடுகளுக்கும் இடையில் வலுவான பாராளுமன்ற தொடர்புகளை பேணுவதற்கும் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

3. இந்த அமர்வில் உரை நிகழ்த்தியிருந்த வெளியுறவுத் துறை அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான ஜனநாயகப் பெறுமானங்கள் மற்றும் பூகோள அமைவிடம் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி, ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சம் ஆகியவற்றுக்காக

இந்தியாவின் ஆக்கபூர்வமான பங்களிப்புகள் குறித்து மிகவும் ஆழமாக குறிப்பிட்டிருந்தார். கடந்தவருடம் இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடி நிலையின்போது அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் பிரதிபலிப்பாக இந்தியாவால் துரிதமாகவும் போதியளவிலும் வழங்கப்பட்டிருந்த ஆதரவு தொடர்பாகவும் அவர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார். மேலும், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் இருதரப்பு கடன் வழங்குனர்கள் வழங்கிய ஆதரவைக் காட்டிலும் இந்தியாவால் துரிதமாகவும் பாரியளவிலும் வழங்கப்பட்ட 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி உதவியானது முன்னொருபோதும் அவ்வாறு வழங்கப்படாததொன்றாகும் எனவும் அவர் இங்கு தெரிவித்திருந்தார்.

4. அத்துடன், மின்சார விநியோக வலையமைப்புடனான நேரடி தொடர்பு மற்றும் பெட்ரோலியம், ஓயில் மற்றும் ஏனைய உராய்வு நீக்கிகள் **(POL)** போன்றவற்றின் விநியோகத்துக்கான குழாய் கட்டமைப்பு ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் எரிசக்தி தேவைகளை எதிர்கொள்வதற்கு தேவையான ஒன்றிணைந்த முயற்சிகள் தொடர்பாகவும் இங்கு குறிப்பிட்டிருந்த வெளியுறவுத் துறை அமைச்சர், நிலைபேறானதும் ஸ்திரமானதுமான தீர்வுகளை வலுவாக்கும் இந்தியாவின் முயற்சிகளையும் சுட்டிக்காட்டியிருந்தார். அதுமட்டுமல்லாமல், பரஸ்பர நலன்களுக்காக திருகோணமலை உட்பட்ட பிராந்திய பொருளாதார மையங்களின் செயற்பாடுகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான ஆற்றல்கள் குறித்தும் அவரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

5. அத்துடன் கடல், வான், எரிசக்தி, வர்த்தகம், முதலீடு மற்றும் டிஜிட்டல் துறைகளை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு துறைகளிலுமான மேம்பட்ட தொடர்புகளிலேயே இரு நாடுகளினதும் சுபீட்சம் தங்கியிருப்பதாகவும் வெளியுறவுத் துறை அமைச்சர் வலியுறுத்தியிருந்தார். மேலும், இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயம் குறித்தும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்த வெளியுறவுத்துறை அமைச்சர், இரு தலைவர்களுக்கிடையிலான பேச்சுகள் வர்த்தகம், முதலீடு மற்றும் மக்களிடையேயான தொடர்பை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வலுவாக்கியதுடன் ஒத்துழைப்பிற்கான பொதுவான இலக்கினையும் எடுத்துக்காட்டுகிறது எனவும் தெரிவித்திருந்தார்.

6. இதேவேளை பிராந்திய பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து தனது கருத்துகளை முன்வைத்திருந்த வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள், பிராந்தியத்தில் அனைவருக்கும் வளர்ச்சியும் பாதுகாப்பும் (சாகர்) கோட்பாடு தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்ததுடன் கொழும்பு பாதுகாப்பு குழுமம், இந்து சமுத்திர வளைய அமைப்பு மற்றும் பிம்ஸ்டெக் ஆகிய மன்றங்கள் ஊடான வெளிப்படுத்தல்கள் தொடர்பாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

7. மேலும், இலங்கையின் பல்லின, பன்மொழி, மற்றும் பன் மத அடையாளத்தை பாதுகாப்பதற்கான இந்தியாவின் ஆதரவையும் வெளியுறவுத்துறை அமைச்சர் வலியுறுத்தியிருந்தார். சுபீட்சம் நிறைந்த ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதை ஆகியவற்றுக்கான தமிழ் சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்காகவும் அவர் நம்பிக்கையினை வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அர்த்தம்நிறைந்த அதிகாரப் பகிர்வும், மாகாண சபை தேர்தல்களை முற்கூட்டியே நடத்துவதும் இந்த இலக்கினை அடைவதற்கு வழிசமைக்கும் எனவும் அவர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

8. இந்தியா இலங்கை இடையிலான நிலையான நட்புறவினை நினைவூட்டுவதாக அமைந்த வெளியுறவுத்துறை அமைச்சரின் உரையானது, பரந்த பிராந்தியம் மற்றும் இரு நாடுகளினதும் பரஸ்பர நலன்களுக்காக உறவுகளை வலுவாக்குவதற்கான அர்ப்பணிப்புக்கும் புத்தியிரளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

*********************

கொழும்பு
23 ஆகஸ்ட் 2023